உ

சிவமயம்



# மங்கலத் திருமணம்



## மாவிரதன் பிரகாஜினி
## தம்பதிகளின்

## திருமண அன்பளிப்பு
## 09.07.2007

உ

சிவமயம்

# மங்கலத் திருமணம்

தொகுப்பு

*கலாபூஷணம் சைவப்புலவர்*

**சு. செல்லத்துரை**

## மாவிரதன் பிரகாஜினி
## தம்பதிகளின்
## திருமண அன்பளிப்பு

"புனிதவாசம்"
பத்தாவத்தை,
இளவாலை.

"வேலவளவு"
ஏழாலை மேற்கு,
சுன்னாகம்.

09.07.2007

உ

சிவமயம்



# மணமக்கள்
# மாவிரதன் பிரகாஜினி
# தம்பதிகளுக்குப்
# பெற்றார் வழங்கும்
# மங்கல வாழ்த்து



பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற - குறள்

அருந்தவம் செய்து பெற்று
அன்புடன் வளர்த்தெடுத்து
பொருந்திய கல்வி தந்து
புகழ்பட்டப் படிப்பும் தந்து
திருந்திய ஒழுக்கம் பண்பு
தூயதாம் வாழ்வும் காட்டி
பெரும்பொருள் நீரே யென்னப்
பெருமையில் மகிழ்ந்து நின்றோம்

இருவரின் குலமும் பண்பும்
இயைந்திடு வனப்பும் கல்வி
தரும்புகழ் உளம் பொருந்தத்
தகுவதாய் இணைந்தீர் இன்று
இருமனம் கலந்து வாழும்
திருமணம் கண்டீர் நன்றே
பெருவளம் கொழிக்கும் வாழ்வில்
பேறறம் தழைக்க வாழ்வீர்!

புன்னகை தவழும் வாழ்வும்
புத்திரச் செல்வப் பேறும்
நன்மைகள் அறங்கள் ஓங்கும்
நற்றவத் தெய்வம் போற்றி
இன்புறு சுற்றம் பேணி
என்றுமே மகிழ்ச்சி பொங்க
இன்பமும் சுகமும் துய்த்து
இன்னிலம் போற்ற வாழ்வீர்

வணக்கம்

மகன் தந்தைக் காற்று முதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்லெனும் சொல் - குறள்

மணமகனின் பெற்றார்
திரு. திருமதி.
செல்லத்துரை சிவகாமசுந்தரி
இளவாலை.

மணமகளின் பெற்றார்
திரு. திருமதி.
குலசிங்கம் இந்திராதேவி
ஏழாலை.

உ

சிவமயம்

யாழ். இளவாலை

திருநிறை செல்வன் செல்லத்துரை மாவிரதன்

அவர்களுக்கும்

யாழ். ஏழாலை

திருநிறை செல்வி குலசிங்கம் பிரகாஜினி

அவர்களுக்கும்

2007.07.09 திங்களன்று

மணமகள் இல்லத்தில் நடைபெற்ற

திருமணவிழாவில்

வாழ்த்தி வழங்கப்பெற்ற

# மணமங்கல வாழ்த்துப்பா மலர்

## சங்கரனைப் பார்வதியைத் தாம்நிகர்த்தீர்

திங்கள் முகத்தெரிவை செய்யபிரகாஜினியை
மங்கலநாண் பூண்டேற்ற மாவிரத – கங்கையணி
சங்கரனைப் பார்வதியைத் தாம்நிகர்த்தீர் தண்மழலை
மங்கலஞ்சேர்ந் தின்புறுவீர் நீர்.

## வையம் போற்ற ஏற்றாய் வாழிய

சைவப் புலவர் செல்லத்துரை சிவகாமசுந்தரி
தெய்வ அருளாற் பெற்ற சேய்மாவிரத னின்று
சைவமகன் குலசிங்கம் இந்திரா மகள் பிரகாஜினியை
வையம் போற்ற மங்கல நாணணிந் தேற்றாய் வாழிய.

## நல்லன செய்து வாழி

தசரத குமாரன் சீதா தாமெனல் தகுதி யேதான்
நிசவுல கினிலே நீவிர் நிமலனை நினைந்து போற்றி
கஜமுகன் அருளினாலே கவினுறு மழலை பெற்று
நயம்பட வுரைப கர்ந்து நல்லன செய்து வாழி.

## நங்குல மக்கட்கு நல்விருந்தாவீர்

இல்லற வினிய வாழ்வில் இணைந்த தம்பதியர் நீவிர்
நல்விருந் தாய மைவீர் நங்குல மக்கட் கெல்லாம்
எல்லவர் மனத்து மின்பம் எய்திட வைப்பீர் மேலாம்
நல்லவர் குழாத்து ழொன்றி நந்தம ராகி வாழ்வீர்.

## பரமன் கருணையில் இன்பசங்கமமாகுவீர்

கங்கையைப் பாம்பைக் கவினுறு திங்களைக் கனகசடைப்
பங்கினி லேற்ற பரமன் கருணையிற் பார்புகழச்
சங்கம மாயின்பம் தேக்கிச் சகத்தினின் தண்ணிழலாய்
மங்கல வாழ்வினில் மாவிர காஜினி மன்னுவிரே.

வாழ்த்தி வழங்குவோர்

**கலாபூஷணம் பண்டிதர்**

**சி. அப்புத்துரை இரத்தினம் தம்பதியர்**

**அன்பழகன் நிலோஷனி** **சதீசன் இந்துமதி**
**சிவபாலன் சாந்திமதி** **இளவழகன் விமலினி**

மயிலங்கூடல், இளவாலை, இலங்கை.

# மனையறம் விளங்க

# மணமக்கள் வாழ்க

## மாவிரதன் பிரகாஜினி

மங்கலம் பொங்கும் மனையறத் திருநாள்
மாவிரதம் தங்கும் இணையற்ற பெருநாள்
எங்கும் மங்கலம் தங்கிடும் வேளை
தங்கள் வாழ்வில் பிரகாஜினி தரும்நாள்

கொஞ்சும் இளமைக் குதூகலம் பொங்க
மஞ்சள் குங்குமம் மங்கலத் தாலி
விஞ்சும் மணமலர் மாலைகள் சூடி
நெஞ்சம் இனிக்கும் நிகரில் திருநாள்

தென்றல்வீசத் தேன்மலர் விரிய
முன்றில் தோறும் முகமலர் மலர
இன்று வந்தது வாழ்வில் வசந்தம்
என்றும் இன்பம் பொலியும் மணநாள்

எண்ணும் எழுத்தும் பண்ணும் பதமும்
கண்ணும் மணியுமாய்க் கலந்து மகிழ்ந்து
எண்ணம் ஒன்றாய் இதயம் கலந்துநல்
வண்ணம் வாழ்க வளம்பல பொலிக

எங்குலம் விளங்க பார் புகழ் ஓங்கி
தங்கும் வாழ்வில் வேரது பரப்பி
என்றும் வாழும் பேறது பெற்று
நன்றே வாழ வென்றே வாழ்த்தும்

**மணமகனின் அண்ணா குடும்பம்**
**நாவரசன், சுரேகா, நிலான், சுகான்**

44, UPHALL ROAD
ILFORD ESSEX
IG12JF U.K.
T.P. 00442085143810

மனையறம்புக்க

## மாவிரதன் பிரகாஜினி

தம்பதிகளுக்கு

# மங்கல வாழ்த்து

இன்பத்தில் இதயம் பொங்க
இனித்திடும் வாழ்க்கை பொங்க
சந்தத்தில் கவிதை பொங்க
சொந்தத்தில் இளமை பொங்க
வண்ணத்தில் வடிவு பொங்க
கிண்ணத்தில் பாலும் பொங்க
எண்ணத்தில் எளிமை பொங்க
வந்ததே திருமண மின்று

பொன்னிழை வேய்ந்த குடிலில்
புன்னகை ததும்பும் பொழுதில்
பெண்ணினம் பெற்ற பெருந்தகை
பிரகாஜினி நாமம் கொண்டவள்
மன்னவன் முடியின் வைரமாம்
மாவிரதன் நாமம் கொண்டானை
கண்ணியம் கரையா இணையும்
புண்ணியர் மனங்கள் போற்றி

பண்ணிலே படர்ந்த பாடலாய்
பக்குவம் நிறைந்த வாழ்க்கையில்
மண்ணிலே இனிது வாழ
மாண்புறு அறங்கள் ஓங்க
சொல்லிலே சுவை கூட்டி
சுந்தரத் தமிழ் பாடுகிறேன்
கன்னலே காதல் கொள்ளும்
களிப்புறு வாழ்க்கை வாழ்க

சுந்தரன் சொன்ன தமிழும்
வள்ளுவன் உரைத்த மொழியும்
இல்லறம் செழிக்க இனிதுமாம்
இம்மையும் மறுமையும் தொடருமாம்
நல்லறம் எதுவென்று காண்பீர்
நாளுமே நற்பணி செய்வீர்
சொல்லறம் காத்து வாழ்க
சுந்தரத் தமிழாய் வாழ்க

இளங்கதிர் உலவிடும் வேளை
இதுவே நலந்தரும் சாலை
துலங்கிடும் ஒளியாய் வாழ
துடிப்புடன் வாழ்க்கை ஓட
நலந்தரும் தென்றல் சுவையாய்
நாளொரு நூலினைக் கற்பீர்
வளம் பெறட்டும் அறிவாற்றல்
நிலைபெறட்டும் உங்கள் வாழ்க்கை

வேறு

இல்லறம் செழிக்க நல்ல
இனிதுயர் அறங்கள் சொன்ன
பல்லவன் வளர்த்த சைவப்
பண்பொடு பொலிக வாழ்வு
நல்லறம் உரைக்க எங்கள்
நாட்டிலே வீரர் தோன்ற
வல்லவர் சைவர் என்றே
வகையுறு வாழ்க்கை' வாழ்வீர்

**வாழ்த்துவோர்**

**மணமகளின் அண்ணா குடும்பம்**

**சைவப்புலவர் கு. றஜீவன் தர்மினி தம்பதிகள்**

உ
சிவமயம்

இளவாலை

காடிவளை இந்து இளைஞர் சனசமூக நிலையப்

பொன்விழாக் காலத் தலைவராயிருந்த

திருநிறைசெல்வன் செல்லத்துரை மாவிரதன்

அவர்களுக்கும்

ஏழாலை திருநிறைசெல்வி குலசிங்கம் பிரகாஜினி

அவர்களுக்கும்

நிகழ்ந்த திருமண விழாவில்

வாழ்த்தி வழங்கிய

# மணமங்கல நல்வாழ்த்து

யாழ் இளவாலை வாழ்விடமான
கலாபூஷணம் சைவப்புலவர்
செல்லத்துரைசிவ காமசுந்தரிதம்
இல்லறப்பயனாய் இந்நிலத்துற்ற
இனியமைந்தன் இன்முகச்செல்வன்
மாவிரதன் நன் மாண்புமிக் குடையான்
மெய்கண்டானில் மேதகக் கற்று

மாணவ முதல்வனாய் மதிப்புடன் திகழ்ந்து
"மெய்யவன்" விருது மேன்மையாய்ப் பெற்று
புதிய உயர்கலைக் கல்லூரிதன்னில்
பட்டதாரியாய்ப் பயின்று சிறந்து
மாணவர் மன்ற மலராசிரியராய்
"கலாதரிசனம்" மலரச் செய்து
பல்கலைக்கழகப் பட்டதாரியாய்
கல்வியில் உயர்ந்து கண்ணியம்மிக்க
ஒழுக்கம்பண்பு உயர்குண நலன்நிறை
விழுப்பம் மிக்குயர் வாலிபனாகி
இளவாலை இந்து இளைஞர்தங்கள்
சனசமூக நிலையத் தலைவனாய்
பொன்விழாக் காலத் தலைமை தாங்கி
பொன்விழா மண்டபம் புதிதாயமைத்து
பொன்மலர் "நித்திய கல்யாணி" மலர
பொன்விழா நிகழ்வைப் புதுமையாய் நடத்தி
ஒல்லுடை அறநெறிப் பாடசாலையின்
அதிபராயிருந்து அறநெறி வளர்த்தும்

ஒல்லுடைவயிரவர் ஆலயப் பணியில்
தன்னையர்ப்பணித்துச் சைவம்வளர்த்தும்
பிறந்தவூர்பெருமை பேசிடவுயர்ந்து
ஈழத்தலைநகர் கொழும்பில் இயங்கும்
இந்து சமய கலாசார அலுவல்கள்
திணைக்களத்தெழுது வினைஞராயமர்ந்து
உயர்ந்து நிற்கும் உத்தமமணாள!
சைவத்திருமடம் சான்றோர் சங்கமம்
தெய்வப் புலமைச் சித்தர்வாழ்பதி
ஏழாலை மேற்கு வேலவளவு
சீலம்மிக்குயர் செந்தண்மையாளர்
குலசிங்கம்துணை இந்திரா தேவிதம்
குலக்கொடியாம் பிரகாஜினி நங்கை
தெல்லிப்பழையுயர் சீர்மிகுயூனியன்
கல்லூரி தன்னில் கற்றுச்சிறந்து
உத்தம மாணவி யெனப்புகழ்பெற்று
உயர் தொழில் நுட்பக் கல்லூரி தன்னில்
எச்என்டீஏ பட்டமும் பெற்று
கவின்பெறு கல்வியும் ஒழுக்கமும் ஓங்க

மணவிழாக் காணும் மங்கை நல்லாய்!
அந்தணர் அறவோர் அன்புடைச் சுற்றம்
மங்கல மங்கையர் மதியுயர் சான்றோர்
பொங்கிடும் இன்பம் பொலிந்திடு மன்றில்
செந்தமிழ் சைவத் திருமண முறையில்
மஞ்சள் குங்குமம் மங்கலத்தாலி
மணமலர் மாலைகள் மாண்புறப்பூண்டு
சிவனும் உமையுமாம் தெய்வப்பொலிவுடன்
எவரும் வாழ்த்த இன்மணம் கண்டீர்
ஒருவரில் ஒருவர் உள்ளம் கலந்து
பெருமகிழ்வோடு இல்லறம்பூண்டு
பெரும் பெறல் மக்களும் பேறுகள் பலவும்
பெற்றுச் சிறந்து பெருவாழ்வு வாழ
வாழ்த்தினம் இனிதே வாழ்க பல்லாண்டு.

வாழ்த்தி வழங்குவோர்

| | | |
|---|---|---|
| **க. கிருபானந்தராசா** | **சு. கிஷோகுமார்** | **சே. ஈஸ்வரன்** |
| தலைவர் | பொருளாளர் | செயலாளர் |

காடிவளை இந்து இளைஞர் சனசமூக நிலையம்
இளவாலை, இலங்கை.

உ
சிவமயம்

# திருமண அழைப்பிதழ்

என்றும் இனியீர் !

சீர்திகழ் சர்வ சித்துநல்லாண்டு
ஆனி இருபத் தைந்துதிங்கள்
ஊர் மகிழ் காலை ஒன்பது மணிமுதல்
தேர்சுபவேளை சிங்கலக்கினத்தில்
(2007.07.09 - 9.29-10.21)
நல்லிளவாலைச் சைவப்புலவர்
செல்லத்துரை மகன் மாவிரதனுக்கும்
தெய்வத்திருநிறை சைவப் பயிர்விளை
ஏழாலைப்பதி வேலவளவு
குலசிங்கம்மகள் பிரகாஜினிக்கும்
எல்லாம்வல்ல சிவனருளாலே
மணமகளில்ல மன்றில் நிகழும்
மணவிழாக் கண்டு மகிழ்ந்துவாழ்த்தி
விருந்திலும் உவந்திட வருகவென்றும்மை
விரும்பி அழைத்தனம் வருக வணக்கம்.

இனிதே வரவேற்கும்

| | |
|---|---|
| செல்லத்துரை சிவகாமசுந்தரி<br>தம்பதிகள்<br>மணமகனின் பெற்றோர் | குலசிங்கம் இந்திராதேவி<br>தம்பதிகள்<br>மணமகளின் பெற்றோர் |

## இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர்

# திரு. சீ. தெய்வநாயகம்

## அவர்கள் வழங்கிய

# வாழ்த்துச் செய்தி

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது. - குறள்

என்னும் வள்ளுவர் கூற்றுக்கிணங்க இல்வாழ்க்கை-யானது "இன்னார்க்கு இன்னார் என்று எழுதி வைத்தானே தேவன் அன்று" எனப் பகர்கின்றது.

கிரகஷ்தம் எனும் பந்தத்தில் புகுந்து வாழ்க்கை எனும் பெரும் பயணத்தில் காலடி எடுத்துவைக்கும் திரு. மாவிரதன் செல்வி பிரகாஜினி இருவரும் இன்று தம்பதிகளாகின்றனர்.

திருமணம் என்பது மனம், வாக்கு, காயம் என்பவைகளினால் பிணைக்கப்பட்டது. இன்று இருவருக்கும் ஏற்படும் பிணைப்பு இறுதி மூச்சுவரை நிலைத்திருக்க வேண்டும் என்பதே பெரியவர்களின் விருப்பமும் நல்லாசியுமாகும்.

இன்பம், துன்பம் இரண்டும் வாழ்க்கையில் ஏற்படும். இன்பத்தைக் கண்டு இறுமாப்பு அடையாமலும், துன்பத்தைப் பார்த்து துவண்டு விடாமலும் வாழ்வதே நல்வாழ்க்கையாகும். நாணல் மாதிரி வளைந்து கொடுத்து இல்வாழ்க்கையை நல்வாழ்க்கையாக்குவதே திருமணத் தம்பதியினரின் முக்கிய பண்பாகும்.

இத்தகைய சிறந்த பண்பு திரு. திருமதி. மாவிரதன் பிரகாஜினி தம்பதியினருக்குண்டு. இத்தினத்திலிருந்து இருமனமும், ஒருமனமாகச் சேர்ந்து பூவும் மணமும் போல் இல்வாழ்க்கையில் மணம் வீசி, நல்லதொரு குடும்பமாக வாழ்ந்திட இறையருளை வேண்டி நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மணமக்கள் தங்களுடைய திருமண அன்பளிப்பாக எல்லோருக்கும் எக்காலத்தும் பயன்தரக் கூடிய "மங்கலத் திருமணம்" என்னும் அரிய இந்நூலை வழங்குவது பாராட்டிற்குரிய முன்மாதிரியான செயலாகும்.

**வாழ்க மணமக்கள்**

# முகவுரை

திருச்சிற்றம்பலம்

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவில்லை
கண்ணில் நல்லஃதுறும் கழுமல வளநகர்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே.

திருச்சிற்றம்பலம் *(சம்பந்தர் தேவாரம்)*

சைவத் தமிழர்களாகிய எங்கள் வாழ்வில் மங்கல வைபவங்களுக்குக் குறைவே இல்லை. இவையாவும் கிரியைகள் மூலமே மந்திரபூர்வமாக நடைபெற்று வருகின்றன. இவற்றில் திருமண வைபவம் மிக முக்கியத்துவமுடையது. காரணம் இரண்டு குடும்பங்கள் ஒன்றாய் இணையும் மங்கலம் இதற்குண்டு.

திருமணக் கிரியைகளைச் செய்யும்போது எது எது யார் யாரால் செய்யப்பட வேண்டும் என்பதை எல்லோரும் அறிந்துகொள்ள வேண்டும். அத்துடன் ஏன் செய்ய வேண்டும், எப்படிச் செய்யவேண்டும், அதனுடைய நோக்கம் என்ன, பயன் என்ன என்பவற்றைப் புரிந்துணர்வுடன் செய்வதால்தான் பூரண பயனைப் பெறலாம். எமது வாழ்வும் பண்பட்ட பயனுடைய வாழ்வாக மலரும்.

இதற்கு உபகாரமாகவே **மங்கலத் திருமணம்** என்னும் இந்நூலை மணமக்களின் அன்பளிப்பாக உங்கள் முன் வைக்கின்றோம். இந்நூலில் திருமணக் கிரியைகள் பற்றிய முக்கியமான செயற்பாடுகளை எல்லோரும் அறிந்துகொள்ளக் கூடிய வகையில் இலகு தமிழில் சுருக்கமாகத் தந்துள்ளோம்.

எல்லோரும் பயன் பெற்று வாழ்க!

**திரு. திருமதி**
**செல்லத்துரை சிவகாமசுந்தரி**
**தம்பதிகள்**
**மணமகனின் பெற்றோர்**

**திரு. திருமதி**
**குலசிங்கம் இந்திராதேவி**
**தம்பதிகள்**
**மணமகளின் பெற்றோர்**

## திருமண நிச்சயம்

பெற்றோர் தங்கள் பிள்ளைகள் பருவம் அடைந்ததும் அவர்கள் வாழ்வின் உறுதிப்பொருள்களாய அறம் பொருள் இன்பம் வீடு ஆகியவற்றைப் பெறுதற்குரியதாகிய இல்லறத்தை மேற்கொள்வதற்காய திருமணத்தைச் செய்துவைக்க வேண்டும்.

இதுவரை மாணவப் பருவமாகிய பிரமச்சரியத்தில் இருந்த தம் பிள்ளைகள் தம் சந்ததி விருத்தியின் பொருட்டும், தம் முன்னோர் நற்கதியடையும் பொருட்டும் அறம் முதலான பணிகளைச் செய்வதற்காகவும் திருமணம் செய்தல் வேண்டும். இருமனம் கருத்தொருமித்து ஒருமனமாய்த் திருமணம் அமைதல் வேண்டும்.

ஒத்த குலமும் பண்பும், ஒத்த வயதும் கல்வியும் ஒத்த உடல் வளமும் உள நலமும், ஒத்த உணர்வுகளும், நல்வாழ்வுக்கேற்ற சாதகப் பொருத்தமும் பார்த்துத் திருமணம் நிச்சயிக்கப்படும்.

மணமக்களும் ஒருவரை ஒருவர் அறிந்து பார்த்துப் பேசி விரும்பிச் சம்மதித்தல் முக்கியமாகும்.

இரு பகுதியார்க்கும் பூரண திருப்தி எனக் கண்டதன் மேல் சோதிடர் மூலமாக இருவருக்கும் பொருத்தமான சுபநாள்களில் திருமணப் பதிவு, பொன்னுருக்கல், திருமணம் என்பவற்றுக்கு நாள் குறிக்கப்படும். திருமணக் கருமங்கள் பற்றி இரு பகுதியாரும் மனம் விட்டுக் கதைத்துச் சம்பந்தம்

> அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
> பண்பும் பயனும் அது.

கலத்தல் ஆகிய மனம் கலந்து மகிழ்ந்தற்கடையாளமாக விருந்துண்டு மகிழ்வர்.

## திருமணப் பதிவு

சட்டப்படி திருமணம் செய்வதற்குரிய அனுமதியாகிய திருமணப் பதிவு பெண் வீட்டில் நன்னாளில் பதிவாளரால் மேற்கொள்ளப்படும். இது வசதி போலத் திருமணத்தின் முன்போ அல்லது திருமண நாளன்றோ நடைபெறும்.

மணமக்கள் திருமணத்துக்குச் சம்மதம் தந்து 'ஒருவரை ஒருவர் எக்காலத்தும் காத்து ஈருடற் கோருயிராய் வாழ்வோம்' என உறுதிசெய்து மங்கல மாலையும், மோதிரமும் மாற்றியணிந்து மகிழ்வர். பால்பழமும் பரிமாறி உண்பர்.

பெற்றார் தங்கள் பிள்ளைகள் இனிமேல்தலைவன் தலைவியாகி தாம் வாழும் சமூகத்தில் முழுமனிதராக வாழ்வதற்கு ஆதாரமாகப் பெண்ணின் பெற்றார் பெண்ணுக்குச் சீதனமும் ஆணின் பெற்றார் ஆணுக்கு முதுசமும் கொடுத்து மற்றும் ஆடை அணிகளும் கொடுத்து மகிழ்வர்.

மங்கல கருமங்கள் ஒவ்வொன்றிலும் விருந்து கலத்தல் நடைபெறும்.

## பொன்னுருக்கல்

இது மணமகன் வீட்டில் நடைபெறும். பலகாரம், வெற்றிலை, பாக்கு, பழம், தேங்காய் முதலியவற்றுடன்

> இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
> முயல்வாருள் எல்லாம் தலை.

சுமங்கலிகளுடன், மணமகள் வீட்டார் மணமகன் வீட்டிற்கு வருவர். மணமகன், தோழன், மணமக்களின் தாய் தந்தையர், உறவினர், நண்பர்கள் சூழ இருக்கும் சபையிலே பூரண கும்பம் வைத்துத் தீபமேற்றி வழிபாடு செய்து மண்சட்டியில் உமி பரவி அதில் தங்கத்தை வைத்து ஆசாரி உருக்குவார். பின் தேங்காய் உடைத்து இளநீரை விட்டு நெருப்பைத் தணித்து உருகிய தங்கத்தை வெற்றிலை, பாக்கு, பழம், பூ, மஞ்சள், குங்குமம், எலுமிச்சம்பழம் உள்ள ஒரு தட்டில் வைத்து சபையில் உள்ளோருக்கும் காட்டி அவர்கள் ஆசீர்வதிப்பார்கள். பின்னர் கன்னிக்கால் நடுதல் நிகழும். நேரிய முள் முருக்கந் தடியை மணமகன் வீட்டில் வடகிழக்கில் நட்டு அதற்கு மாவிலை, பட்டுக் கட்டி அதன் அடியில் பாத்தி போலச் செய்து பாலுடன் சேர்த்து நவதானியம் (பாலிகை) தூவித் தீபாராதனை செய்வர். பின்னர் விருந்துபசாரம் நடைபெறும். மணமகள் வீட்டிலும் கன்னிக்கால் நடும் வழக்கம் உண்டு.

அன்றுதான் திருமணத்திற்கான பலகாரம் சுடுவதற்கு ஆரம்பித்தலும் பெண்ணிற்கான கூறை கொள்ளுதலும் உறவினர்க்குச் சொல்லத் தொடங்குதலும் நடைபெறும்.

## மணப்பந்தல்

வீட்டு முற்றத்திலே பந்தல் அமைத்து வெள்ளை கட்டி பழ வாழைக்குலை மாவிலை தோரணங்கள் பூமாலை முதலியவற்றால் அலங்காரம் செய்து கிழக்கு முகமாக

> மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
> நன்கலம் நன்மக்கட் பேறு.

மணவறை அமைக்க வேண்டும். இப்பொழுது மண்டபங்களில் திருமணம் நடைபெறுவதால் மண்டப அலங்காரம் சிறப்பாக அமையும். வாசலில் கோலமிட்டு நிறைகுடம் வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம், மஞ்சளிற் பிள்ளையார் வைத்துத் தீபம் ஏற்றிவைப்பர். அங்கு மணமகனை வரவேற்கப் பூமாலையும் கால் கழுவச் செம்பில் நீரும் இருக்கும்.

## மணமகனை மங்கல நீராட்டல்

மாப்பிள்ளைத் தோழன் (மணமகளின் சகோதரன்) சுமங்கலிகள் சகிதம் மணமகள் வீட்டினர் ஒற்றித்த எண்ணிக்கையில் பலகாரத் தட்டுடன் மணமகன் வீட்டிற்கு வருவர். மணமகன் வீட்டு வாயிலில் பூரண கும்பம், தாம்பூலம், மஞ்சளில் அல்லது சாணத்தில் பிடித்த பிள்ளையார் வைத்துத் தீபம் ஏற்றப்பட்டிருக்கும். வாசலில் வெள்ளைத் துணி விரிக்கப்பட்ட ஒரு ஆசனத்தில் (பலகையில்) கிழக்கு நோக்கி மணமகன் இருக்க ஒருவர் தேங்காயுடைக்கத் தோழனும் மங்கல வாழ்வுடையோரும் (ஒற்றை எண்ணிக்கையில்) மாப்பிள்ளையின் தலையில் பாலும் அறுகும் மூன்று முறை வைத்து பின் நீர்நிலைக்கு (கிணறு அல்லது குளியலறை) மாப்பிள்ளையை அழைத்துச் சென்று நீராட்டுவர்.

மணமகனை அலங்காரம் செய்து தலைப்பாகை அணிவர். (முன்பு கடுக்கன் பூட்டுதலும் இடம்பெற்றது) அந்நேரத்திற்கு ஏற்ற உணவு பரிமாறப்படும்.

> பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
> மக்கட்பே றல்ல பிற.

சுபவேளையில் மணமகனைத் தோழன் அழைத்துக் கொண்டு மணகள் வீட்டிற்குப் (திருமண மண்டபத்திற்கு) புறப்படுவர். அவ்வேளை 3 அல்லது 5 தட்டங்களில் பலகாரம், தாம்பூலம், மலர், தேங்காய், தாலி, கூறை, மங்கலப் பொருட்களைச் சுமங்கலிகள் எடுத்து வருவர்.

## மணமகளை மங்கல நீராட்டல்

தோழியும் (மணமகன் சகோதரி) மங்கல மங்கையரும் பெண்ணின் தலையில் மூன்று முறை பாலுடன் அறுகுவைத்து நீராட்டிப் பெண்ணை அலங்கரிப்பர். பெண்ணிற்கு முன்னர் ருது சாந்தி செய்திராவிட்டால் பிட்டு, களி முதலியவற்றால் ஆலத்தி எடுக்க வேண்டும்.

## மாப்பிள்ளை அழைத்தல்

மங்கல வாத்தியம் முழங்க உறவினர், நண்பர்கள் சூழ மணமகன் மணப்பந்தலுக்கு (மண்டபத்திற்கு) அழைத்து வரப்படுவார். வாயிலிலே தோழன் கால் கழுவத் தோழனுக்கு மணமகன் (மோதிரம்) கணையாழி அணிவார். பெண்ணின் தந்தை மணமகனுக்கு மலர்மாலை அணிய இரு சுமங்கலியர் ஆலத்தி எடுத்து வரவேற்பர். மணமகன் மணமேடையில் வலமாகச் சென்று மணவறையில் அமர்வார். தோழன் அவருக்கு இடப்புறம் அமர்வார்.

## மணமேடை

மணவறை கிழக்கு முகமாக அமைக்கப்பட்டிருக்கும். மேடையில் வட கிழக்கில் சுவாமி அம்பாள் கும்பமும் வட

> மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
> வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

மேற்கில் சந்திர கும்பமும் சூழ பாலிகை (நவதானியம்)க்கான மண்சட்டியும் வடக்கில் அம்மியும் நடுவில் ஓம குண்டமும் விநாயக பூசை, பஞ்ச கௌவிய பூசைக்கான ஒரு கும்பமும் தென்மேற்கில் நவக்கிரக கும்பமும் கிழக்கில் அரசாணியும் சூழ நான்கு கும்பமும் குத்துவிளக்கும் அதற்குக் கிழக்கில் மஞ்சள் நீர் நிறைந்த பாத்திரம் ஒன்றும் அமைந்திருக்கும்.

## ஆரம்பக் கிரியை

மணமகனுக்குத் திருநீறு கொடுத்து அணியச் செய்து வலதுகை அணி விரலில் பவித்திரம் (தர்ப்பை) அணிவித்து சிவாசாரியார் சங்கற்பம் செய்வார். பின்னர் விநாயகர் பூசை, புண்ணியாகவாசனம், பஞ்சகௌவியபூசை, செய்து மண்டபத்தையும் திரவியங்களையும் தூய்மைப்படுத்தி மணமகனுக்குப் பஞ்சகௌவியம் பருகக் கொடுப்பர்.

## அங்குரார்ப்பணம்

நவ தானியத்தை பாலுடன் சேர்த்து மண் நிறைந்த சட்டியில் போடுதல் அங்குரார்ப்பணமெனப்படும். பயிர் வளர்ச்சிக்குச் சந்திரகிரணம் துணைபுரிவதால் முதலில் கும்பத்தில் சந்திரனைப் பூசித்துப் பின் மணமகன் உறவினரில் மூன்று சுமங்கலிகளை அழைத்து விபூதி அணிவித்து அவர்கள் மூலமாகப் பாலிகை (நவதானியம்) போடச் செய்து அவர்களுக்கு வெற்றிலை பாக்குப் பழம் கொடுப்பர். சந்திர கும்ப நீரை பாலிகைக்குத் தெளிப்ப துண்டு.

> தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
> சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

## இரட்சா பந்தனம் (காப்புக் கட்டல்)

எடுத்த கருமம் இடையீடின்றி இனிது நிறைவேறவும் இடையே தடை ஏற்படாதிருக்கவும் இரட்சா பந்தனம் செய்தல் வேண்டும். ஒரு தட்டத்தில் பச்சை அரிசி பரவி வெற்றிலை, பாக்கு, பழம் வைத்து தேங்காய் மீது மஞ்சள் பூசிய நூலை வைத்து அந்நூலைக் கிரியாகுரு மணமகனின் வலதுகை மணிக்கட்டில் கட்டி முடிச்சின் மீது விபூதி அணிவர். அவ்வேளை மணமகன் உறவினர் ஒருவர் தேங்காய் உடைப்பார்.

சிவகும்பம், அம்பாள் கும்பத்தில் சிவன் சக்தியைப் பூசித்துத் தோஷம் விலக நவக்கிரக கும்பத்தில் நவகோள்களையும் பூசித்துப் பின் அக்கினி காரியம் செய்தல் நடைபெறும்.

## மணமகள் வருகை

மணமகள் முகத்தை மெல்லிய துணியினால் மறைத்துத் தோழி முதலிய சுமங்கலியர் மணமகளை அழைத்து வந்து மணமகனுக்கு வலப்புறத்தில் இருத்துவர். திருநீறு அணிவித்து இடதுகை அணிவிரலில் பவித்திரம் அணிவித்து சங்கற்பம் செய்து இடது மணிக்கட்டில் காப்புக் கட்டுதல் நடைபெறும். அவ்வேளை மணமகளின் உறவினர் ஒருவர் தேங்காய் உடைப்பார்.

> எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
> பண்புடை மக்கட் பெறின்.

## பிதிர் ஆசீர்வாதம்

இல்வாழ்க்கையில் தவறின்றி நடத்தலுக்கு அக் குடும்பத்தின் முன்னோர் வாழ்த்து வேண்டும். அக் குடும்பத்தின் முன்னோரான பிதிர்களைத் திருப்திப்படுத்தும் பொருட்டும் அவர்களின் ஆசீர்வாதம் பெறும் பொருட்டும் சாந்தி சிரார்த்தம் செய்யப்படும்.

மணமகனின் பெற்றோர் மணமகனுக்கு இடப்புறத்தும் மணமகளின் பெற்றோர் மணமகளுக்கு வலப்புறத்தும் கிழக்கு முகமாக அமர்ந்திருக்க திருநீறு அணிவித்து பவித்திரம் தரிப்பித்துச் சங்கற்பம் செய்தல் வேண்டும். மணமக்களின் தந்தையரால் பிதிர்களைக் குறித்துச் சிரார்த்தம் செய்யப்படும். தர்ப்பையைக் கிழக்கு முகமாக வைத்து அறுகும் நெல்லும் கொண்டு செய்தல் வேண்டும். இது பிதிர்களை விவாகத்திற்கு அழைக்கும் தன்மையது.

## கன்னிகாதானம்

மணமக்களின் பெற்றோர் ஒருவருக்கொருவர் சந்தன திலகமிட்டு பன்னீர் தெளித்து மரியாதை செய்த பின்னர் மணமகளின் பெற்றோர் கிழக்கு முகமாக இருந்து மணமகளைக் கிழக்கு முகமாக வைத்து வெற்றிலை, பாக்கு, பழம், மஞ்சள், பொன், காசு, எலுமிச்சம் பழம் என்பவற்றுடன் பெண்ணின் கையை மணமகன் கையிற் கொடுத்து இருவரின் தகப்பன், பேரன், பூட்டன் ஆகியோரின் பெயரைக் கூறி இந்தப் பெண்ணை இந்த ஆணிடம் ஒப்படைக்கிறேன் என்று பெண்ணின் தாயார் மூன்று முறை

> குழல் இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்
> மழலைச்சொல் கேளா தவர்.

தண்ணீர்விட மணமகன் உறவினர் ஒருவர் தேங்காய் உடைக்க மங்கல வாத்தியம் முழங்க பெண்ணின் தந்தையார் பெண்ணை மணமகனிடம் ஒப்படைப்பார்.

தங்கத்தினாற் செய்யப்பட்ட கொடியில் தாலியும் இரண்டு தங்க நாணயங்களும் அமைந்திருக்கும். தாலியிலே விநாயகர், சிவலிங்கம் அல்லது இலக்குமியின் திருவுருவம் அமைந்திருக்கும். தங்க நாணயத்திலும் அவ்வாறு அமைக்கலாம். தாலியையும் கொடியையும் சுத்திசெய்து, அதிலே மூர்த்தியைப் பூசித்து சம்பாத ஓமம் செய்தல் வேண்டும். தாலி கூறை முதலியவற்றை பெரியோர்களைக் கொண்டு தொடுவித்து ஆசீர்வதித்த பின் தாலியை அம்பாள் கும்பத்தில் சூட்டிக் கூறையை மணமகன் மணகளுக்குக் கொடுக்க மணமகள் அதை அணிந்து வருவார்.

## மங்கலநாண் பூட்டுதல்

கூறை உடுத்தி வந்த மணப்பெண் மணமகனுக்கு வலப்புறம் அமருவார். முகூர்த்த குற்றம் நீங்குதற்காக ஒருதானம் செய்யப்படும். மணமகன் எழுந்து பெண்ணிற்கு வலப்புறம் நின்று மணமகனின் உறவினர் ஒருவர் தேங்காய் உடைக்க பின்புறத்தே ஒரு பெண் தீபமேந்த மணமகள் கழுத்தில் மங்கலநாண் பூட்டுவார். அவ்வேளை மங்கல வாத்தியம் முழங்க சபையோர் அட்சதை அல்லது மலர் தூவி ஆசீர்வதிப்பார். மங்கலநாணில் திருநீறு சாத்திப் பெண்ணிற்கும் திருநீறு சாத்துவார் மணமகன். மணமகள் மணமகனுக்கு இடதுபுறம் அமருவார். மணமகள் நெற்றியில் குங்குமத் திலகமிட்டு கண்ணாடி முதலிய மங்கலப் பொருட்கள் மணமகனால் பெண்ணிற்கு வழங்கப்படும்.

> தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
> முந்தி இருப்பச் செயல்

## மாலை மாற்றுதல்

உடலாலும் உள்ளத்தாலும் இருவரும் ஒருவர் என்ற தத்துவத்தை உணர்த்துவது மாலை மாற்றுதல். மணமகள் கழுத்தில் அணிந்திருக்கும் பூமாலையை மணமகனுக்கும் மணமகன் கழுத்தில் அணிந்துள்ள பூமாலையை மணமகளுக்கும் மூன்றுமுறை அணிவிப்பர். மணமகள் மணமகனுக்கு இடப்புறம் அமருவார்.

## மதுபர்க்கம் (பால் பழம்) புசித்தல்

தயிர், நெய், தேன், சர்க்கரை, பழம் ஆகியவற்றைக் கலந்து முதலில் மணமகள் மணமகனுக்கு மூன்றுமுறை உண்ணக் கொடுப்பார். பின் மணமகன் பெண்ணிற்கு மூன்று முறை உண்ணக் கொடுப்பார். இருவருக்கும் வாழ்க்கைத் துணை அமைந்ததும் முதலில் இனிமையான உணவை உட்கொள்ளுவது வாழ்வு இனிமையாக அமையவேண்டும் என்ற நோக்கிலாகும். இப்போ பாலும் வாழைப்பழமும் சேர்த்துப் புசித்தல் இடம்பெறுகிறது. பின் நூறு ஆகுதி செய்யப்படும்.

## பசு தரிசனம்

பசுவின் உடலில் சகல தேவர்களும், புண்ணிய நதிகளும் பிறவும் அமைந்திருப்பதாலும் நல்ல சகுனத்திற்காகவும் புதுமணத் தம்பதியினர் பசுவைத் தரிசனம் செய்வர். பசுவின் பின்புறத்தில் இலக்குமி வாசம் செய்வதால் பசு கிழக்கு நோக்கிய வண்ணம் நிற்க மணமக்கள் இருதய மந்திரத்தால் பசுவின் பின்புறத்தைத்

> ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
> சான்றோன் எனக்கேட்ட தாய்.

தரிசிப்பர். புதுவாழ்க்கை ஆரம்பிக்கும் போது முதலில் காண்பது மங்கலமானதும் புனிதமானதுமாக இருக்க வேண்டும் என்று பசுதரிசனம் இடம்பெறுகிறது. பின் மூலமந்திரத்தால் நூற்றெட்டு ஆகுதி செய்யப்படும்.

## பாணிக் கிரகணம்

பாணி என்பது கை, கிரகணம் என்பது பற்றுதல் அல்லது பிடித்தல், இது கைப்பிடித்தல் எனப்படும். அக்கினி சாட்சியாகவும் பெரியோர் சபையோர் சாட்சியாகவும் நாம் கரம் பற்றியிருக்கிறோம். முதுமையடைந்தாலும் கூட நாம் சேர்ந்தே இருப்போம் என்று மணமகள் கை கீழே மேல்நோக்கி அமையப் பிடித்தல் வேண்டும்.

## ஏழடி வைத்து நடத்தல்

மணமகன் மணமகள் கையைப் பிடித்து அக்கினிக்குப் பக்கத்தில் ஏழடி நடப்பர். இது இல்வாழ்விற்குத் தேவையான ஏழுபொருட்களான உணவுப்பொருள், உடற்பலம், இறைவழிபாடு, மனஅமைதி, அறிவு, காலத்திற்கு காலம் வரும் பொருட்களும் அதனால் வரும் சுகமும், யாகாதி கருமங்களிற்கு வேண்டிய துணைகள் என்பவற்றைப் பெறுவதற்கு இருவரும் முயற்சி செய்வதற்கு வேண்டிய அருளைக் கடவுளிடத்துப் பெறுவதற்காகச் செய்யப்படும். இதிலே சொல்லும் மந்திரத்தாலும் கிரியையாலும் மணமகள் மணமகனின் கோத்திரத்தில் ஐக்கியமாகிறார்.

> மகன்தந்தைக் காற்று முதவி இவன்தந்தை
> என்நோற்றான் கொல்எனும் சொல்

## அம்மி மிதித்தல்

நான்கு மூலைவிட்டமுள்ள ஒரு கல்லை (அம்மி) வைத்து அதன்மேல் மணமகன் பெண்ணின் காலைத் தூக்கி வைத்துக் கால் நடுவிரலில் மெட்டி (மிஞ்சி) அணிவார். அம்மி மிதித்தலின் நோக்கம், பெண்ணானவர் கல்லைப் போல் உறுதியுடன் மனம் தளராது தன்னுடைய நிலையி னின்றும் பிரியாமலும் கணவனிற் பற்று நீங்காமலும் இருக்க வேண்டும் என்பதாம். அக்கினியை வலம் வந்து அதிலே பொரியிட்டு மீண்டும் அம்மியில் மணமகளின் காலைத் தூக்கி வைத்தல் நிகழும். மும்முறை அக்கினியை வலம் வந்தபின் குற்றங்கள் தீருவதற்காகப் பிராயச்சித்த ஓமம் செய்யப்படும்.

## கணையாழி எடுத்தல்

அக்கினியை வலம் வரும் பொழுது இந்நிகழ்வு இடம்பெறும். அரசாணிக்குக் கிழக்கே உள்ள மஞ்சள் நீர் நிரம்பிய பாத்திரத்தினுள் ஒரு மோதிரத்தை (கணையாழி) இட்டு இருவரில் ஒருவர் அதை எடுப்பர். வாழ்க்கையில் புரிந்துணர்வு விட்டுக்கொடுத்தல் முதலியவற்றை அறிவுறுத்த இச்செயல் நடைபெறும்.

## அருந்ததி காட்டல்

வானத்தில் துருவ மண்டலத்திற்கு அருகில் சப்தரிஷி மண்டலம் உண்டு. இதில் ஏழு நட்சத்திரங்கள் ஒளிரும்.

> அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையத்து
> இன்புற்றார் எய்தும் சிறப்பு

இவ்வேழு நட்சத்திரங்களுக்கிடையில் வசிட்டர் இருப்பார். அவருக்கு அருகில் அருந்ததி இருப்பாள். கணவன் மனைவி அன்புடையராகவும், தனவந்தராகவும் இருக்க விரும்பும் தம்பதியினர் அருந்ததியைத் தரிசிப்பர். இரவு நேரத்திலே தான் அருந்ததி பார்க்க முடியும். பகல் வேளையில் நிகழும் திருமணத்தில் அதற்கென வைத்த கும்பத்திலே பூப்போட்டு வணங்குவர். வசிட்டரும் அருந்ததியும் போல எடுத்துக்காட்டாகத் தம்பதியர் வாழவேண்டும் என அருந்ததி காட்டல் நிகழும்.

## பூர்ணாகுதி

இது ஓமத்தை நிறைவுசெய்யும் கிரியையாகும். குருக்கள் சிருக்கில் நெய் நிரப்பிச் சிருவத்தால் மூடி ஓமகுண்டத்தில் நெய்யைச் சொரியும்போது மணமக்கள் வெற்றிலை, பாக்கு, பழம், தேங்காய், பொரி, சமித்து முதலியவற்றை இடுவர். பின்னர் தீபாராதனை செய்து ரட்சை (ஓமாக்கினியிலே சுடப்பட்ட தர்ப்பையுடன் நெய் சேர்த்துக் குழைத்து) எடுத்து மணமக்களை அணியச் செய்வர்.

## ஆசீர்வாதம்

மணமக்கள் எழுந்து கிழக்கு முகமாக நிற்கக் குருக்கள் ஆசீர்வாத மந்திரம் கூறி அட்சதை போட்டு மணமக்களை வாழ்த்துவார். பின்னர் மணமக்களின் பெற்றோரும் வயதில் மூத்த சபையோரும் மண்மக்களை அட்சதையிட்டு வாழ்த்துவர்.

அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த வுடம்பு

அட்சதை என்பது முனை உடையாத பச்சை அரிசியும் மஞ்சட் பொடியும் அறுகும் சேர்ந்த சேர்வையாகும். வாழ்த்தும்போது 'ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி' வாழ வேண்டும் என்பர். ஆலமரம் காலம் செல்லச் செல்ல அடிமரம் பழுதுபட்டாலும் கிளைகளில் விழுது தோன்றி அவை நிலத்தில் பதிந்து தாங்கி ஆலமரத்தை வாழவைக்கும். அறுகு நிலத்திலே படர்வது, படரும் தோறும் வேரூன்றி விருத்தியாகும். இலகுவில் அழியாது. ஆதலால் தம்பதியர் சந்ததி பெருகி நிலைத்து வாழ வேண்டும் என்ற நோக்கத்திலேயே அறுகரிசியிட்டு வாழ்த்துவர்.

மணமக்களின் கைகளிற் கட்டப்பட்ட காப்புக்களை அவிழ்த்து பவித்திரங்களைக் கழற்றித் தட்சணையுடன் குருக்களிடம் கொடுத்தல் வேண்டும். குருக்களுக்கு வஸ்திரதானம் என்பன கொடுத்தலும் நிகழும். நிறைவில் குருக்கள் விபூதி கொடுப்பர்.

இரு சுமங்கலியர் ஆலத்தி எடுத்துத் திலகத்தை மணமக்களுக்கு அணிவிப்பர். அங்கு வந்த அனை வருக்கும் விருந்துபசாரம் நடத்தப்படும்.

## பூதாக்கலம்

புதிய பாத்திரத்தில் மணமக்களுக்கெனத் தயாரிக்கப் பட்ட சாதம், கறி முதலியவற்றை ஒரு வாழையிலையில் இட்டு மணமகள் மணகனுக்கு ஊட்டிய பின் மணமகன் மணமகளுக்கு ஊட்டுவார்.

> முகத்தான் அமர்ந்தினிது நோக்கி அகத்தானாம்
> இன்சொ லினதே அறம்.

## மணமக்களை மணமகன் வீட்டில் வரவேற்றல்

மணமக்களை முதலில் குல தெய்வத்தின் கோயிலுக்கு அழைத்துச் சென்று வழிபாடு செய்யச் செய்வர். பின் மணமகனின் வீட்டுக்கு அழைத்து வரவேற்பர். புதிய இடத்திற்கு வந்து புதுவாழ்வு தொடங்கும் பெண்ணிற்குச் சகல வசதிகளையும் செய்து மனம் கலங்காது பேணவேண்டிய பொறுப்பு ஆணிற்கு உண்டு.

நல்ல விதத்திலே குடும்பத்தை நடத்திக் கணவனைப் பேணிப் பெருமையடையச் செய்தல் பெண்ணிற்குரியது. ஈருடல் ஓருயிராய் தம்பதியினர் இல்லறத்தை நல்லறமாய் நடாத்தி நன்மக்களைப் பெற்று பிறருக்குத் தம்மால் இயன்ற உதவி புரிந்து எல்லா உயிர் மீதும் அன்புகொண்டு வாழுதலே வாழும் நெறியாகும். இதுவே சிறந்த அறமாகும். இல்வாழ்க்கைப் பயனும் அதுவேயாகும்.

## பதினாறு செல்வமும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க

உரு வளர்வயது பூமி உயர்தவம் கருணை யூக்கம்
பெருநிதி ஒழுக்கம் சீலம் பேரபிமானம் கல்வி
பொருவலி விஜயம் வீரம் புண்ணியமாதின்போகம்
திருநிறைபுகழ் ஈரெட்டும் பெற்றுநீர் வாழி வாழி

வணக்கம்.

> நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
> அன்றே ஒழிய விடல்



இல்வாழ்க்கை என்பது காதலர் வாழ்க்கையே, காதலர் ஒருவர் உள்ளத்தில் ஒருவர் கரைந்து ஒருவர்க்காக ஒருவர் தியாகம் செய்து வாழ்வர். காதலர் இருவரும் ஒருமனப்பட்டு, மக்கள் விருந்தினர் முதலானவர்களுக்காகத்தியாகம் செய்து வாழ்வர்.

★★★★★

இல்லறமென்பது காதலர் இருவரும் தம்மை மறந்து பிறரிடத்தில் செலுத்தும் அன்பாக வளர்கிறது. கணவனும் மனைவியும் ஆகிய இருவரும் ஒரு மனம் உடையவராய் உலக நன்மை கருதி வாழும் தன்மையே இல்லறம்

★★★★★

தம்மையும் காத்துப் பிறரையும் காக்கவல்ல இல்லறத்தில் அன்புடன் வாழ்வதே இல்வாழ்க்கையின் பண்பு. அறத்தைப் போற்றி வாழ்வதே இவ்வாழ்க்கையின் பயன்.

★★★★★

கணவனும் மனைவியும் ஒருவர் ஒருவரிடம் கொண்ட காதல் இல்வாழ்க்கையில் அன்பாய்ப் பாயவேண்டும். அந்த அன்பு முதலிற் பெருகும் இடம் தாம் பெற்றுவளர்க்கும் குழந்தை களிடமே. குழந்தைகள் தம் உயிரின் பகுதியாகவும், உடம்பின் பகுதியாகவும் பிறந்து வளர்வதால் பெற்றோர் தம் குழந்தைகளைத் தம் உயிர்போல் போற்றுகிறார்கள், தம் கண்போலக் காப்பாற்றுகிறார்கள். ஆதலால் தூய அன்பு பெருகுகிறது.

**டாக்டர் மு. வரதராசனார்**

வள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்